# 29-06-2024 செய்தி

## வெளிநாடுகளில் இருந்து தாயகத்துக்கு ரூ. 10 லட்சம் கோடி!

- கடந்த ஆண்டு வெளிநாடுகளில் பணிபுரியும் இந்தியர்கள் தாயகத்துக்கு 120 பில்லியன் டாலர்களை (சுமார் ரூ.10 லட்சம் கோடி) அனுப்பி உலக அளவில் முதலிடம் பிடித்துள்ளனர். இதுதொடர்பாக உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கை
- தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிக நிறுவனங்களில் உயர்திறன் கொண்ட இந்திய புலம்பெயர் தொழிலாளர்கள் பணியாற்றுவதற்கு உகந்த நாடுகளில் அமெரிக்கா, பிரிட்டன், சிங்கப்பூர் ஆகிய 3 நாடுகள் முன்னிலையில் உள்ளன.
- வெளிநாடுகளில் உள்ள இந்தியர்கள் தாயகத்துக்கு அனுப்பும் மொத்த தொகையில் இந்த 3 நாடுகளின் பங்கு மட்டும் 36 சதவீதமாகும்.
- இதற்கு அடுத்த இடத்தில் உள்ள ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து 18 சதவீத தொகை இந்தியாவுக்கு அனுப்பப்படுகிறது. இதைத் தொடர்ந்து சவூதி அரேபியா, குவைத், ஓமன், கத்தார் ஆகிய நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு அனுப்பப்படும் தொகையின் பங்கு 11 சதவீதமாகும்.

## 4 புதிய மாநகராட்சிகள் உருவாகின்றன

**புதிய மாநகராட்சிகள் நகராட்சிகள்**

- வரலாற்றுத் தலைநகரமாக விளங்கிய புதுக்கோட்டை கோயில் நகரமான திருவண்ணாமலை, தொழில் நகரமான நாமக்கல்,
- கல்வி நகரமான காரைக்குடி போன்ற நகராட்சிகளை மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்த வேண்டுமென பெறப்பட்ட கோரிக்கைகளை ஏற்று அந்த நகரங்களையும் அவற்றின் அருகில் அமைந்துள்ள விரைந்து நகரமயமாகிவரும் பேரூராட்சிகள், ஊராட்சிகள் போன்ற உள்ளாட்சி அமைப்புகளையும் ஒன்றிணைத்து புதிய மாநகராட்சிகள் உருவாக்கப்படும்.

**திருத்தம் ஏன்?**

- மாநகராட்சிக்கான வரையறைகளை தளர்த்தி மக்கள்தொகை மற்றும் ஆண்டு வருமானத்தை பொருட்படுத்தாமல் நான்கு நகராட்சிகளையும் மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்த மசோதாவில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- அதன்படி, புதுக்கோட்டை நகராட்சி மற்றும் 11 ஊராட்சிகளை ஒன்றிணைத்து புதுக்கோட்டை மாநகராட்சி, திருவண்ணாமலை நகராட்சி மற்றும் 18 ஊராட்சிகள், அடி அண்ணாமலையிலுள்ள பகுதிகள் ஆகியவற்றை ஒன்றிணைத்து திருவண்ணாமலை மாநகராட்சி, நாமக்கல் நகராட்சி மற்றும் 12 ஊராட்சிகளை ஒன்றிணைத்து நாமக்கல் மாநகராட்சி, காரைக்குடி நகராட்சி மற்றும் இரண்டு பேரூராட்சிகள், ஐந்து ஊராட்சிகளை ஒன்றிணைத்து காரைக்குடி, மாநகராட்சி என தரம் உயர்த்தப்பட உள்ளன.

## எப்.ஏ.டி.எப்., கூட்டத்தில் இந்தியாவுக்கு பாராட்டு

- பணப்பரிமாற்ற மோசடி மற்றும் பயங்கரவாதத்துக்கான நிதி அளிக்கும் நடவடிக்கைகளை தடுப்பது தொடர்பான மத்திய அரசின் பரஸ்பர மதிப்பீட்டு அறிக்கையை எப்.ஏ.டி.எப்., எனப்படும், நிதி நடவடிக்கைகள் பணிக்குழு ஏற்றுக்கொண்டுள்ளது.
- பல்வேறு நாடுகளிலும் பணப்பரிமாற்ற மோசடி மற்றும் பயங்கரவாத அமைப்புகளுக்கு நீதி அளிக்கும் குற்றங்களை தடுக்கும் நடவடிக்கைகளை எப்.ஏ.டி.எப்., எனப்படும், நிதி நடவடிக்கைகள் பணிக்குழு கண்காணித்து வருகிறது.
- இந்த குழுவின் கூட்டம், தென்கிழக்கு ஆசிய நாடான சிங்கப்பூரில் நடந்தது.
- இதில், இந்திய அரசு சார்பில், மத்திய நிதி மற்றும் பொருளாதார உளவுப் பிரிவின் கூடுதல் செயலர் விவேக் அகர்வால் பங்கேற்றார்.

## குடியரசுத்தலைவர் உரை

- குடியரசுத் தலைவர் உரை, ஆளுநர் உரை நிகழும்போது அதைத் தொடர்ந்து அந்த உரைகள் மீது விவாதம் நடைபெறும்போதும் சில அடிப்படை மரபுகள் பின்பற்றப்படுவது வழக்கம்.
- மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவர் என்கிற பதவி அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று.
- பிரிட்டிஷ் நாடாளுமன்ற மரபுப்படி அவரை காத்திருப்பு பிரதமர் என்று அழைப்பார்கள்.
- ஆளும்கட்சி பெரும்பான்மை இழந்தால் மாற்று அரசு அமைக்க அவர்தான் அழைக்கப்படுவார். அதுமட்டுமல்ல, ‘வெஸ்ட்மின்ஸ்டர்’ முறை எனப்படும் பிரிட்டிஷ் நாடாளுமன்ற வழக்கப்படி ‘காத்திருப்பு பிரதமர்’ தனது கட்சி உறுப்பினர்களை வைத்து நிழல் அமைச்சரவை உருவாக்குவது வழக்கம்.
- இந்தியாவில் அதுபோல நிழல் அமைச்சரவை நாடாளுமன்றத்திலும், சட்டப்பேரவைகளிலும் அமைக்கப்படுவதில்லை.
- எதிர்க்கட்சித் தலைவருக்கான பணிகள், உரிமைகள், சலுகைகள் குறித்த விதிமுறைகளோ வரைமுறைகளோ இல்லையென்றாலும், ஒரு பிரதமர் அல்லது முதல்வருக்கு வழங்கப்படுவது போன்ற முக்கியத்துவமும், மரியாதையும் அவருக்கு அவையில் உண்டு.
- நாடாளுமன்ற மரபுகளைப் பின்பற்றி, விவாதங்களின் அடிப்படையில் ஆளும்கட்சியின் தவறுகளைத் தட்டிக்கேட்டு, தன்னை நிழல் பிரதமராக நிரூபிக்க வேண்டிய பொறுப்பு ராகுல் காந்திக்கு உண்டு.
- கூச்சல், குழப்பத்தின் அடிப்படையில் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு பிரதமராகி விட முடியாது என்பதை அவர் உணர வேண்டும்.
- எதிர்க்கட்சித் தலைவர் என்கிற பதவியின் கௌரவத்தையும், முக்கியத்துவத்தையும் உயர்த்திப் பிடிப்பதன் மூலம்தான் ராகுல் காந்தி தன்னை பிரதமர் பதவிக்குத் தகுதியானவர் என்று நிரூபிக்க முடியும்.
- சுதந்திர இந்தியாவில் அடல் பிகாரி வாஜ்பாயைத் தவிர, எதிர்க்கட்சித் தலைவர்களாக இருந்த யாரும் பிரதளமர்கள் ஆனதில்லை.
- பிரதமர்கள் வேண்டுமானால் (ராஜீவ் காந்தி,பி.வி.நரசிம்ம ராவ்) எதிர்க்கட்சித் தலைவர்களாகி இருக்கின்றனர்.